**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 23.09.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுத்த தலைமுறை வரிசைமுறை தரவு பகுப்பாய்வு குறித்த செய்முறைப் பயிற்சித் திட்டம் தொடக்கம்**

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்ப மையத்தின் சார்பில் "அடுத்த தலைமுறை சீக்வென்சிங் (NGS) தரவுகளின் பகுப்பாய்வு" குறித்த நடைமுறை பயிற்சி நிகழ்ச்சி 22.09.2026 முதல் 25.09.2026 வரை நடைபெறுகிறது. இப்பயிற்சித் திட்டத்தில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதில் தமிழ்நாடு வேளாண்மைக் பல்கலைக்கழகம் (TNAU), எலிசபெத் க்ரீக் தோட்டக்கலைத் தொழில்நுட்ப மையம், வார்விக் பல்கலைக்கழகம், இங்கிலாந்து, ARM ஆய்வகம், ICAR–தேசிய வாழை ஆராய்ச்சி மையம், குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி, டெல்லி பல்கலைக்கழகம், ஸ்ரீ சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி மற்றும் CEGS அறக்கட்டளை – கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆய்வு மையம் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சித் திட்டம் தொடக்க விழாவுடன் தொடங்கியது. தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தகவலியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் L..அருள் வரவேற்புரையாற்றினார். தனது உரையில், இப்பயிற்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் நவீன உயிரியல் ஆராய்ச்சியில் NGS தொழில்நுட்பங்களின் வளர்ந்து வரும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். முனைவர் ந. செந்தில், இயக்குநர், CPMB&B, தொடக்கவுரையாற்றினார். தனது உரையில், மரபணுத்

தரவுகளின் அதிவேக வளர்ச்சி மற்றும் மேம்பட்ட வரிசைமுறை தொழில்நுட்பங்கள் மற்றும் தரவு விளக்கக் கருவிகளில் திறன் பெறுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.முனைவர் வி. பாலசுப்பிரமணி, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், TNAU, சிறப்புரையாற்றினார். தனது உரையில், NGS தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம், அவற்றின் பல்வேறு பயன்பாடுகள் மற்றும் நவீன அறிவியல் ஆராய்ச்சியில் அவற்றின் தாக்கம் குறித்து, நடைமுறை சார்ந்த எடுத்துக்காட்டுகளுடன் எடுத்துரைத்தார்.தொடக்க விழா முனைவர் ம. ஜெயகாந்தன், உதவிப் பேராசிரியர், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தகவலியல் துறை, அவர்களின் நன்றியுரையுடன் நிறைவுற்றது.நான்கு நாட்கள் நடைபெறும் இப்பயிற்சித் திட்டத்தில், NGS தரவு பகுப்பாய்வு மற்றும் கணினி வழி அணுகுமுறைகள் குறித்த செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம், உயர்–திறன் வரிசைமுறைத் தரவுகளை கையாளுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் விளக்குதல் ஆகியவற்றில் பங்கேற்பாளர்களுக்குத் தேவையான திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன.

*மக்கள் தொடர்பு அலுவலர்*